இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சி இருக்கிற நேரத்தில் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தைத் தவிர எந்தத் தலைவருடைய படத்தையும் பேருந்துகளில் வைக்க வேண்டியதில்லை என்ற கருத்து அன்றைக்கு இருந்த காரணத்தினாலே, அதையே தொடர்ந்து இந்த அரசும் மேற்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் இல்லாவிட்டாலும், நமது எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மட்டுமாவது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். திருவுருவப் படத்தை மாட்டுவதற்கு அமைச்சர் பெருமகனார் அவர்கள் கருணை கூர்ந்து இந்த நேரத்திலேயே படத்தை மாட்டுவதற்கு அறிவிப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் மீது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு உடனடியாக அந்தப் படத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளில் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 165, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் பரந்தாமன் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

165—

தமிழகத்திலுள்ள காடுகளில் காட்டு வளத்தைப் பெருக்குதல்.

*12813 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் உள்ள காடுகளில் மர விதைகளைத் தூவியும், மரக் கன்றுகளை நட்டும் காட்டு வளத்தைப் பெருக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்கு வரத்து துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தரந்தாழ்ந்த காடுகளில் வான்மூலமும், கையாலும் விதைகளைத் தூவியும், மரக்கன்றுகளை நட்டும் ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் காட்டு வளம் பெருக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் வனப் பகுதிகளில் செடி, மரங்கள் இல்லாமல் தரிசாக உள்ளது. இப்படிப்பட்ட இடங்களில் தொழில் போக்குவரத்து, பொதுப்பணித்துறை—இப்படி எல்லாத் துறை களிலும் புரட்சி செய்கின்ற நம் புரட்சித் தலைவியின் அரசு வனப் பகுதிகளிலும் மரக் கன்றுகளை நட்டு பசுமைப் புரட்சி செய்ய அரசின் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன் னேன். வான் மூலமாகவும் விதைகள் தூவுகிறோம்; சில அடர்ந்த காடுகளில் சென்று அவர்கள் அந்த விதைகளைத் தூவ முடியாத காரணத்தால் அதுபோன்ற நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது. இந்திய நாட்டிலே இருக்கிற எல்லா மாநிலங்களைத் காட்டிலும் சிறப்பான முறையிலே காடு வளர்ப்புத் திட்டத்தை ஒரு முன்மாதிரியான மாநிலத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் என்பதை சைனா நாட்டிலே இருந்து வந்த விஞ்ஞானிகள் நம்மைப் பாராட்டி வாழ்த்தி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரி வித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு மட்டும் 1992-93-வது ஆண்டு, 18,500 ஏக்கர் நிலங்களில் ஏறத்தாழ 1 கோடி 25 இலட்சம் ரூபாய்க்கு வான் மூலமாக விதைகள் தூவப்பட்டு இருக்கின்றது; 30 வகையான விதைகளை அங்கே தூவிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத் மன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : வான் மூலமாக விதைகள் தூவுவதற்கு மத்திய அரசாங்கம் ஏதாவது நிதி உதவி செய் கிறதா? பன்னாட்டு நிறுவனங்கள் எந்த வகையில் உதவி செய் கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப் பார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் மத்திய அரசினுடைய திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட போது வான் மூலமாக விதைகள் தூவப்படுவதாகக் கூறுகிறார்கள். என்னென்ன விதைகள் அப்படித் தூவப்படுகின்றன? எந்தெந்த மாவட்டங்களில் அந்த விதைகள் தூவி விதைக்கப்பட்டு இருக்கிறது? இது 1992-93 ஆம் ஆண்டிற்கு செய்யப்பட்டதா என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமி பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் போன்ற பகுதிகளில் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பகுதிகளில் அதிக அளவில் முட்செடிகள் தான் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் அகற்றி அந்த இடங்களிலே நல்ல விலை உயர்ந்த மரங்களை வளர்ப்பதற்கு அந்த இடங்களில் ஆழ் குழாய்க் கிணறு போன்றவற்றை அமைத்து அங்கே தண்ணீர் வசதியோடு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏதேனும் அமைச்சரிடத்தில் திட்டம் வைத்து இருக்கிறாரா? அதோடு காடுகளில் மழைக் காலங்களிலும் ஏற்படும் மழையாலும், புயலாலும் விழுந்து சாய்ந்து கிடக்கின்ற பல கோடிக் கணக்கான மரங்கள் வருடக் கணக்காக அவற்றை எடுத்துச் சென்று ஏலம் விடப்படாமல், பல்வேறு நிலைகளில் கரையான் போன்றவைகள் எல்லாம் அரித்து சேதம் அடைகின்ற நிலைமைகளை எல்லாம் நாங்கள் நேரிடையாகக் கண்டு இருக்கின்றோம்; அப்படி சாய்கின்ற மரங்களை உடனடியாக எடுத்து அவற்றை ஏலம் போடுகின்ற நிலைமையை உருவாக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதர் காடுகள் இருக்கிற இடங்களில் கூட இன்றைக்கு மரங்களை நடுவதற்கு பல்வேறு பரி

[1993 மார்ச் 30

சோதனைகளைச் செய்து நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம். புதர்களை அழிப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆகவே, அந்தந்த இடங்களில் என்னென்ன விதைகளை நாம் போட்டால் அது முளைக்கும் என்பதை நாம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். சிறிய கன்றுகளைக் கூட சில இடைவெளிகளில் நாம் நட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பட்ட நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தக் காடுகளில் மக்கள் நடமாடக் கூடாது என்ற அடிப்படையில் சில பகுதிகளை நாம் தேர்வு செய்து, அந்தப் பகுதியை அரசே எடுத்து நேரடி பார்வையில் வைக்கிற காரணத்தால் அதிலே விழுந்து கிடக்கிற மரங்களை நாங்கள் அப்புறப்படுத்துவதில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால் விழுந்து கிடக்கிற மரங்களை அப்புறப்படுத்துகிறேன் என்று சொல்லி சிலபேர் உள்ளே செல்வார்கள். அதை ஏலம் போடுகிறபோது உள்ளே சென்று சில மரங்களை வெட்டுகிற வாய்ப்பு இருக்கிற காரணத் தால் அதுபோன்ற நடவடிக்கைகள் இருக்ககூடாது என்பதில் இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற அரசுக்குச் சொந்தமான இடங்களில், அதாவது, வனத் துறைக்கு சொந்தமான இடங்களில் நிறைய ஏக்கர் நிலம் இருப்பதால் அதை அரசே ஏற்றுக்கொண்டு, வான்வெளி மூலமாகவும், நேரடியாகவும் விதைகளை தூவு வதற்குப் பதிலாக அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை மக்களுக்கு அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டு காடுகளை வளர்த்தால் அதன் மூலம் அவர்களும் பிழைத்துக் கொள்வார்கள். அரசுக்கும் வருமானம் வரும். அதை அரசு பரிசீலனை செய்தால் அரசுக்கு அதிக செலவு தவிர்க்கப்படும். அதனால் ஏழை எளியவர்கள் பிழைப்பார்கள். அதை அரசு கவனத்தில் கொண்டு செயல் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற நட வடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு இருக்கிறோம். குறிப் பாக சில இடங்களில் ஏறத்தாழ ஒரு லட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையில் அந்தப் பெண்களுக்கு ஒப்பற்ற தலைவியாக இருக்கிற நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகுதான் வனத் துறையில் மாற்றத்தை உருவாக்குகிற வகையில் இந்த விதைகளை தூவுவதோடு, விதைகளை நடுவதற்குக்கூட ஒரு

1993 மார்ச் 30]

லட்சம் பெண்களுக்கு ஆண்டுதோறும் வேலை வாய்ப்பு அளிக்கிற ஒரு திட்டத்தை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொரு கருத்தைச் சொன்னார்கள். அது போன்று வனப் பகுதிகளில் இருக்கிற இடங்களை நீங்கள் லீசுக்கு தரலாம் என்று சொன்னார்கள். அப்படி குத்தகைக்கு தருவதால்தான் இன்றைக்கு வெளியேற்ற முடியவில்லை என்ற நிலை இருப்பது உங்களுக்குத் தெரியும். கோவில் நிலங்கள், தனியார் நிலங்களை குத்தகைக்கு எடுத்தவர்களை அப்புறப் படுத்த முடியவில்லை என்பதால் வழக்கு மன்றங்களுக்குச் சென்று வழக்காடி கொண்டிருக்கிற நிலையை நீங்கள் பார்க்கிறீர்கள். வனத் துறையில் அதுபோன்ற குறைபாடுகள் வரக்கூடாது என்பதற்கு இந்த அரசு கூர்மையாக கவனித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைகளைத் தூவிய பின்னாலே அந்த மலைப் பகுதிகளில், சேலம் மாவட்டத்தில் சென்று பார்க்கிற போது அது கவனிப்பாரற்ற நிலையில், விதைகள் தூவிய இடத்தில் செடிகள் வளராத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு நம்முடைய அரசு தீவிர திட்டத்தைக் கொண்டு வந்து, அந்தச் செடிகள் வளர்வதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது 100-க்கு 75 சதவீத விதைகள் முளைத்துக் கொண்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தை என்னிடத்தில் தந்து இருக்கிறார்கள். சில இடங்களில் அது முளைக்கவில்லை என்பதற்குக் காரணம் மழை பெய்கிறபோது நாங்கள் தூவி விடுகிறோம். தூவிய பிறகு மழை மீண்டும் இல்லையென்று சொன்னால் விதைகள் முளைப்பதற்கு வாய்ப்பு இல்லை. அந்த விதைகளை ஊற வைத்து, அந்த விதைகளை தூவுகிற நேரத்தில், மழை தொடர்ந்து ஒரு வாரத்திற்கு இருந்தால்தான் அந்த விதைகள் முளைக்கும். அது போன்ற சில குறைபாடுகள் இயற்கையின் காரணமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 166, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.